V11Eco

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2025

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **பொருளியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி – I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். 20 x 1 = 20

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்துஎழுதவும்

1. சமநிலை விலை என்பது அந்த விலையில்
   அ.எல்லாம் விற்கப்படுகிறது ஆ.வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
   இ.தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம் ஈ.மிகைத் தேவை சுழியம்
2. பொதுவாக எந்த கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?
   அ.விலைக் கோட்பாடு ஆ.வருமானக் கோட்பாடு
   இ.வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ.வணிகக் கோட்பாடு
3. மிகைத்தேவை நெகிழ்ச்சியில் உள்ள தேவைக்கோட்டின் வடிவம் ஆனது
   அ.படுக்கிடை ஆ.செங்குத்து இ.விரைந்து சரியும் ஈ.மெதுவாக சரியும்
4. உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது
   அ.இறுதிநிலைத் தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் (MRTS) விலை வீதத்தை விட அதிகமாக இருந்தால்
   ஆ.(MRTS)விலை வீதத்தை விட குறைவானால்
   இ.(MRTS) ம் விலை வீதமும் சமமாக இருந்தால்
   ஈ.சம உற்பத்திக் கோடும் சம உற்பத்தி செலவு கோடும் வேறுபட்டிருந்தால்
5. வெளிப்படையான செலவுகள் என்பன
   அ.கையிலிருந்து செய்யும் செலவுகள் ஆ.உண்மை செலவுகள்
   இ.சமூகச் செலவு ஈ.மூழ்கும் செலவுகள்
6. கீழ்க் காண்பவற்றுள் உபரித்திறன் இல்லாதது
   அ.முற்றுரிமை ஆ.முற்றுரிமைப் போட்டி
   இ.சில்லோர் முற்றுரிமை ஈ.நிறைவுப்போட்டி
7. நிறைவு போட்டியில் நிறுவனத்தின் தேவைக் கோடு
   அ.நிலையானது ஆ.படுக்கிடை
   இ.எதிர்மறை சரிவு ஈ.நேர்மறை சரிவு
8. நிலத்திற்கு உண்மையானதும் அளிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தை பயன்படுத்தியவர்
   அ.ஜே எஸ் மில் ஆ.வாக்கர் இ.கிளார்க்
   ஈ.ரிக்கார்டோ
9. இந்திய பொருளாதாரம் ______ காரணமாக வலிமை இன்மையாக இருக்கிறது.
   அ.பொருளாதாரச் சமநிலையின்மை ஆ.கலப்பு பொருளாத்ாரம்
   இ.நகரமயமாதல் ஈ.போதுமான வேலை வாய்ப்புகள் இருப்பது
10. B.R அம்பேத்கர் இந்திய பொருளாதாரப் பிரச்சனைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார்.
    அ.குறைந்த நில உடமையையும் மற்றும் தீர்வுகளும்
    ஆ.இந்திய ரூபாயின் சிக்கல்கள்
    இ.சம தர்ம பொருளாதாரம்
    ஈ.மேற்கண்ட அனைத்தும்
11. 1993 ஆம் ஆண்டில் முன்பதிவு நீக்கப்பட்ட தொழில் துறை
    அ.இரயில்வே துறை ஆ.செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில்
    இ.அணு ஆற்றல் ஈ.அணு கனிமங்கள்
12. நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக துறைக்கானது
    அ.காப்பீட்டுத் துறை ஆ.வங்கித் துறை
    இ.அ மற்றும் ஆ ஈ.போக்குவரத்துத் துறை
13. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத்தீர்வை ______ ஆகும்.
    அ.25% ஆ.50 % இ. 60% ஈ.100%
14. ஊரகப் பகுதி, ஊரக மக்கள் மற்றும் ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது
    அ.ஊரக பொருளாதாரம் ஆ.ஊரக பொருளியல்
    இ.ஊரக வேலை வாய்ப்பு ஈ.ஊரக மேம்பாடு
15. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்
    அ.கோயம்புத்தூர் ஆ.திருப்பூர் இ.ஈரோடு ஈ.கரூர்
16. TICEL ன் பகுதி
    அ.ரப்பர் பூங்கா ஆ.ஜவுளி பூங்கா இ.உணவு பூங்கா ஈ.உயிரி பூங்கா
17. தொகையிடு என்பது ______ என்பதின் தலைகீழ் செயல்பபாடாகும்.
    அ) வேறுபாடு ஆ) கலவை இ) கலந்தகலவை ஈ) வகையீடு
18. இரு அளவுகளுக்கு இடையேசமநிலைஎன்ற சொற்றொடர் ______ குறிக்கின்றது.
    அ) சமமின்மையை ஆ) சமநிலைமை
    இ) சமன்பாட்டை ஈ) சார்பை
19. தேசிய ஊரக சுகாதாரப் பணி அமல்படுத்தப்பட்ட ஆண்டு
    அ.2000 ஆ. 2005 இ.2010 ஈ. 2015
20. மனித மேம்பாட்டு குறியீட்டு எண்ணை உருவாக்கியவர்
    அ.ஜவஹர்லால் நேரு ஆ.M.K.காந்தி இ.அமர்த்தியா குமார் சென் ஈ.தாகூர்

www.Padasalai.Net

பகுதி – II

குறிப்பு : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 2 = 14

**வினா எண் 30**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

21. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக
22. விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு
24. மாறாச்செலவு என்றால் என்ன?
25. விலை பேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக
26. பணக்கூலி மற்றும் உண்மை கூலி வேறுபடுத்துக
27. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக
28. பசுமைப் புரட்சியின் பலவீனங்களை பட்டியலிடுக
29. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?
30. 62=34+4X என்றால் X ன் மதிப்பு காண்.

பகுதி – III

குறிப்பு : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 3 = 21

**வினா எண் 40**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தை தருக மற்றும் நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.
23. பணச் செலவு உண்மைச் செலவு வேறுபாடுகளை கூறுக.
34. காப்_டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக?
35. நிறைவு போட்டி மற்றும் முற்றுரிமை போட்டியின் ஒற்றுமையை விளக்குக
36. இடர் தாங்கும் இலாபக் கோட்பாடு குறிப்பு வரைக
37. சமூக கட்டமைப்புகளை விளக்குக
38. உலகமயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி
39. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?
40. கணித முறையில் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41 அ. ஒரு நிறுவனத்தின் வருவாய்ச் சார்பு $R=600q-0.03q^2$ மற்றும் செலவுச் சார்பு $C=150q+60,000$ என்றால் அந்த நிறுவனத்தின் சராசரி வருவாய் சார்பு, சராசரி செலவு சார்பு இறுதிநிலை வருவாய் சார்பு மற்றும் இறுதி நிலை செலவு சார்பு ஆகியவற்றை காண் **(அல்லது)**

ஆ. பொருளியலில் தன்மையையும் எல்லையையும் விவரி.

42. அ. தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி **(அல்லது)**

ஆ. அகச்சிக்கனங்கள் புற சிக்கனங்களை விவரி

43. அ. பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கு இடையேயான தொடர்பை விளக்குக **(அல்லது)**

ஆ. ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

44. அ. வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி **(அல்லது)**

ஆ. இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி

45. அ. சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக **(அல்லது)**

ஆ. ஊரக பொருளாதார பிரச்சனைகளை ஆராய்க

46. அ. தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. **(அல்லது)**

ஆ. குறுகிய கால செலவு கோடுகளை தகுந்த படத்துடன் விவரி

47. அ. நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக **(அல்லது)**

ஆ. பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

------

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com